Mrs. V. Kumaralinger

உ

Aum

# J / Ilavalai Meihandan M. V.

## Ilavalai

# Founder's Day

# &

# Prize Giving

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

19 / 11 / 2002

Mrs. V. Kumaralingam

உ
சிவமயம்

யா/ இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம்

# நிறுவுநர் நினைவுநாளும் பரிசுத்தினமும்

# 2002

காலம் : 19.11.2002 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி
இடம் : ஏழூர் மண்டபம்
தலைவர் : திரு.அ.பேரம்பலம் (அதிபர்)

ஆசியுரை : அருட்கவி சீ.வினாசித்தம்பி M.A அவர்கள்

**பிரதம விருந்தினர்**

கௌரவ மாவை.சோ.சேனாதிராசா அவர்கள்
பா.ம.உறுப்பினர், யாழ் மாவட்டம்)

**சிறப்பு விருந்தினர்**

திருமதி ச.நாகராஜா அவர்கள்
(உ.க.ப, வலிகாமம் வலயம்)

*நிறுவுநர் நினைவுரை*

திரு.சிவ.மகாலிங்கம் அவர்கள்
(உதவிப்பணிப்பாளர், யாழ் இந்துக்கலாசாரத்திணைக்களம்)

*நிறைவுரை*

சைவப்புலவர் சு.செல்லத்துரை அவர்கள்
(ஓய்வு பெற்ற அதிபர்)

**தங்களை அன்புடன் அழைக்கின்றோம்**

01.11.2002 யா/ இ.மெ.ம.வி.கல்விச் சமூகம்.

## நிகழ்ச்சி நிரல்

பூசையும் இறைவணக்கமும்

மங்கள விளக்கேற்றல்

கல்லூரிக் கொடியேற்றவும், கொடிக்கீதமும்

வரவேற்புரை

ஆசியுரை

அதிபரறிக்கை

நிறுவுநர் நினைவுப் பேருரை

பரிசளிப்புப் பேருரை

பரிசில் வழங்கல்

கலை நிகழ்வுகள்

- குழு இசை
- English Song (இசையும் அசைவும்)
- வில்லிசை "ஸ்தாபகர் வரலாறு"
- நாடகம் "காட்டில் மாநாடு"

நிறைவுரை

பாடசாலைக் கீதம்.

உ
சிவமயம்

"வாழ்க கல்வி"

# அதிபர் அறிக்கை

(2001 மார்கழி – 2002 கார்த்திகை)

என்றும், எங்கும் தோன்றாத் துணையாய் இருந்து, அருள் பாலித்து வரும், நடராசப் பெருமானின் திருவருள் துணைக்கொண்டு இன்றைய எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

நிறுவுநர் நினைவு நாளில் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் அருட்கவி. சீ. விநாசித்தம்பி அவர்களே,

பிரதம அதிதியாக வருகை தந்திருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் மாவை. சோ. சேனாதிராசா அவர்களே,

சிறப்பு விருந்தினராகக் கலந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. ச. நாகராஜா அவர்களே,

நிறுவுநர் நினைவுப் பேருரையை ஆற்றிய ஆற்றுகைப் போல் ஆற்ற வருகை தந்திருக்கும் சிவத் தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் அவர்களே,

நிறைவுரையை வழங்க வருகை தந்திருக்கும் சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களே;

சகோதரப் பாடசாலைகளின் அதிபர்களே, ஆசிரியர்களே, மதிப்பார்ந்த

பெற்றோர்களே, மாணவச் செல்வங்களே, பழைய மாணவர்களே, நலன் விரும்பிகளே, தங்கள் அனைவருக்கும் எனது இனிய காலை வந்தனங்கள்.

வள்ளலார் ஏமேர் இராசரத்தினம் அவர்களின் உள்ளத்தில் முகிழ்த்த "அனைவர்க்கும் கல்வி" எனும் நல்ல சிந்தனையில் இப் பாடசாலை தோற்றம் பெற்றது. அந் நிறுவுநர் நினைவு நாளையும், பரிசளிப்பு நிகழ்வையும் ஒருமித்து நிகழ்த்திக் கொண்டிருப்பதில் பெருமகிழ்ச்சி அடையும் இவ் வேளையில் 2001 – 2002 ஆம் ஆண்டிற்கான அதிபர் அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் பேருவகை அடைகின்றேன்.

இன்றைய இவ் விழா மிகவும் சிறப்பாக அமைந்திட எமது அழைப்பையேற்று பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பாராளு மன்ற உறுப்பினர் கௌரவ மாவை. சோ. சேனாதி ராசா அவர்கள், எமது பாடசாலைக்கு தேவைப்படும் வசதிகளைப் பெற்றுத் தருவதில் மிகுந்த பெருவிருப்புள்ளவர். மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் மிகுந்த நாட்டமுடையவர். அத்தகைய நல்ல சிந்தனையாளனை வருக, வருக என இருகரம் கூப்பி வரவேற்பதில் பெருமகிழ்வுறுகின்றேன்.

இன்றைய தினம் நமக்கெல்லாம் நல்லாசி வழங்கி அமர்ந்திருக்கும் கவியோகி

அருட்கவி. சி. விநாசித்தம்பி அவர்கள் சிறந்த கல்விமான்; நல்லிசைப் புலவர்; நல்ல நாவாளன்; நல்லாசான். அவர்களை வருக, வருக என இருகரம் கூப்பி வரவேற்கின்றேன்.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வலிகாமம் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. சா. நாகராஜா அவர்கள் கல்வி அபிவிருத்திக்காக அயராது உழைப்பவர். மாணவர் உயர்வே தம் உயர்வென எண்ணுபவர். அத்தகைய நல்லாளையும் வருக, வருக என வரவேற்பதில் மகிழ்வுறுகின்றேன்.

"நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே" என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க நிறைவுரை நினைவுப் பேருரையை நிகழ்த்த வருகை தந்திருக்கும் சிவத்தமிழ் வித்தகர். சிவ மகாலிங்கம் அவர்கள் சிறந்த நல்லாசான்; சிறந்த சைவசமயி; ஆற்றொழுக்குப் போலும் பேச்சாளன்; உதவிப் பணிப்பாளர், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சு, அவர்களையும் வருக என வரவேற்கின்றேன்.

நிறைவுரை நிகழ்த்த வருகை தந்திருக்கும் சைவப் புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களே, இவ் வித்தியாலயத்தின் முன்னாள் அதிபர்; ஆற்றொழுக்குப் போலும் பேச்சாளன்; சிறந்த சமூக சேவையாளர். அவர்களையும்

வருக, வருக என வரவேற்பதில் அக மகிழ்கின்றேன். மற்றும் அனைவரையும் வருக, வருக என வரவேற்கின்றேன்.

## ஆசிரிய ஆளணி.

இன்றைய சிறுவர்களே நாளைய நாட்டின் தலைவர்கள். அச் சிறுவர்களை நாட்டிற்குப் பொருத்தப்பாடுடையவர்களாக, நற்பிரசைகளாக ஆக்கும் பணியில் முன்னிற்பவர்கள் நல்லாசான்கள். அந்த வகையில் எமது பாடசாலையில் 14 நிரந்தர ஆசிரியர்கள் கடமை புரிகின்றனர்.

| | |
|---|---|
| இலங்கை அதிபர் சேவை தரம் 1 | - 01 |
| பட்டதாரிகள் | - 03 |
| பயிற்றப்பட்டோர் | - 09 |
| ஏனையோர் | - 01 |

கடந்த வருடம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிக்குச் சென்றோர் திரு. க. விக்கினேஸ்வரராசா (விவசாயம்) திரு. யோ. சிவகோணசலிங்கம் (வர்த்தகம்) செல்வி. தி. விஜயகுமாரி (கணிதம்) இவர்களும் பயிற்சி முடித்து எம் மாணவச் செல்வங்களுக்கு கல்வியறிவூட்ட வருவார்கள் என எதிர்பார்க்கிறோம்.

எமது பாடசாலையில் தற்போது 416 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர்.

| | | |
|---|---|---|
| ஆரம்பப் பிரிவு | 1 - 5 வரை | 155 |
| கனிஷ்ட பிரிவு | 6 - 11 வரை | 237 |
| சிரேஷ்ட பிரிவு | 12 - 13 வரை | 024 |

## பரீட்சைப் பெறுபேறுகள்:

பிரத்தியேக கல்வியைப் பெறும் வாய்ப்புக்கள் இல்லாது பாடசாலையையே முழுமையாக நம்பிவரும் மாணவச் செல்வங்களை எமது பாடசாலையின் அதிகமானவர்கள். அவர்களின் உள்ளத்தேவை அறிந்து, கற்றல், கற்பித்தல் நிகழ்ந்திடவே ஆசிரியர்கள் தம் சேவையை வழங்கி வருகின்றனர். ஆசிரியர்களின் தன்னலமற்ற சேவையாலும் அவர்களின் வழிகாட்டலாலும் எம் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுத் தருகின்றனர். பரீட்சையில் 2001 ம் ஆண்டில் க.பொ.த (சா/த) சித்தியடைந்த வெற்றிப்பின்னம் $\frac{14}{24}$ ஆகும். கணிதப் பிரிவு, விஞ்ஞானப் பிரிவு, வர்த்தகப் பிரிவு ஆகிய துறைகளில் கல்வி கற்பதற்காக 4 பேர் அயற்பாடசாலைகளுக்குச் சென்றுள்ளனர். எமது பாடசாலையில் கலைப்பிரிவில் 7 பேர் கற்கின்றனர். சிறந்த பெறுபேறாக 4A, 2B, 2C, 2S பெற்று, செல்வி. க. கௌசல்யா எமக்கு பெருமை சேர்த்துள்ளார். அவருக்கு எமது பாராட்டுக்கள்.

மேலும் இவ் வருடம் க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த வெற்றிப்பின்னம் $\frac{07}{12}$ ஆகும். சிறந்த பெறுபேறாக A, B, C பெற்று செல்வி. செ. அகல்யா எமது பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார். அவருக்கும் எமது பாராட்டுக்கள். இவர் 5 ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றுள்ளனர் அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள்.

## மாணவ முதல்வரணி:

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பவற்றுக்கு அமைவாக இவ்அணி செயற்பட உப அதிபர் திருமதி சி. தர்மபாலா வழிகாட்டியாக உள்ளார். சிரேஷ்ட மாணவ தலைவனாக செல்வன் சி. சௌந்தரன், சிரேஷ்ட மாணவ தலைவியாக மு. தயாளினியும் தொழிற்பட்டு வருகின்றனர். இவ்வாண்டும் ஆசிரியர் தினத்தைச் சிறப்பாகக் கொண்டாட இம் முதல்வரணி செயற்பட்டமை பாராட்டுக்குரியதாகும்.

## இணைப் பாடவிதானச் செயற்பாடுகள்:

பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் பாடவிதானம், வேலைத்திட்டம், பாடக்குறிப்பு என்பவற்றுக்கு அமைவாக கற்பிக்கப்பட்ட போதும் மாணவர்களை முழுமையாக்கவும், மாணவர்களின் உள்ளார்ந்த திறன்களை விருத்தி செய்யவும் கலாரசனைகளை இனங்கண்டு வெளிக்கொணரவும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள் அவசியம் ஆகின்றன. இந் நோக்கில் எமது பாடசாலையும் மெய்வல்லுநர் போட்டி, தமிழ் மொழி, ஆங்கில மொழித் தினங்கள், போட்டிகள், சமய விழாக்கள் முதலானவற்றைச் சிறப்பாக காலம் தவறாது நடாத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டுத் துறை:

மாணவர்களின் உடல், உளவளர்ச்சிக்கு விளையாட்டுத்துறையும் பெரும்பங்கு வகிக்கின்றது. எமது பாடசாலையும், கல்விப் பகுதியினரால் நடாத்தப்படும் அனைத்து விளையாட்டு நிகழ்வுகளிலும் பங்கு பற்றுவதும் பரிசில்களைப் பெறுவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

விளையாட்டு மைதானத்தில் மாணவர் பெற்ற அனுபவங்கள் என்றும் பசுமை நிறைந்த நினைவுகளாக அவர்களின் மனதிற் பதிந்து விடுகின்றன. இவ் வருடம் பாடசாலை மட்ட மெய்வல்லுநர் போட்டியை வெகுசிறப்பாக முடித்துள்ளோம். பாண்ட் வாத்திய அணி இவ் வருடம் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. மெய்வல்லுநர் போட்டியில் கலைமகள் இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.

### கோட்ட மட்டம்

| நிகழ்ச்சி | பிரிவு | இடம் |
|---|---|---|
| 1. கரப்பந்தாட்டம் | 15 வயதின் கீழ் | 2 ம் இடம். |
| 2. " " | 17 " " | 3 ம் |
| 3. " " | 19 " " | 3 ம் |
| 4. உதைபந்து | 18 வயதின் கீழ் | 2 ம் |
| 5. வலைப்பந்து | 19 " " | 3 ம் |

### வலய மட்டம்

| | | |
|---|---|---|
| 1. கரப்பந்து | 15 வயதின் கீழ் | 1ம் இடம் |

### மாவட்ட மட்டம்

| | | |
|---|---|---|
| 1. கரப்பந்து | 15 வயதின் கீழ் | 2ம் இடம். |

15 வயதின் கீழ், கரப்பந்தாட்ட அணி மாகாண மட்டப் போட்டியில் இவ் வருடம் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது. இவ் அணியும் 19 வயதின் கீழ் கரப்பந்தாட்ட அணியும் இளவாலை பொலிசு நடாத்திய கரப்பந்தாட்டப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்று வெற்றிக் கிண்ணங்களை சுவீகரித்துக் கொண்டன. மைலோ உதைபந்தாட்டக் கிண்ணப் போட்டியிலும் எமது பாடசாலையின் 16, 18 வயதுப் பிரிவினர் பங்கு பற்றியுள்ளனர்.

மெய்வல்லுநர் போட்டியில் எமது பாடசாலை வீராங்கனை மாவட்டமட்டப் போட்டியில் பங்கு பற்றி பரிசில்களைப் பெற்றுள்ளார்.

விளையாட்டு நிகழ்வுகளில் பங்கு பற்றிய வீரர்களுக்கு சிறந்த முறையில் பயிற்சி அளித்தும் அவர்களைச் சிறந்த முறையில் வழி நடாத்தியும் வெற்றிகள் பெறவைத்த ஆசிரியரைப் பாராட்டுகின்றேன். மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## நூலகம்:

"வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்". எமது பாடசாலையின் நூலகமும் மாணவர்களின் அறிவுப் பசிக்கு வழிகாட்டுவதாக அமைந்துள்ளது.

ஆசிரியை திருமதி. வ. குமாரலிங்கம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இயங்கும் இவ் நூலகம் இவ் வருடமும் புதிய நூல்களைப் பெற்று தன் வளத்தைப் பெருக்கியுள்ளது.

## மன்றங்கள் :

மாணவர்களின் தலைமைத்துவப் பண்பு, ஆளுமை விருத்தி, தன்னம்பிக்கை, கடமைக் கூறுகளுக்கு ஏற்ப இருமமாற்றல் போன்ற திறங்களை விருத்தி செய்யும் வகையில் பல மன்றங்கள் உள்ளன.

### • ஆரம்ப பிரிவு மன்றம்.

இம் மன்றப் பொறுப்பாசிரியராகத் திரு. தயானந்தன் அவர்கள் செயற்பட்டு வருகின்றார். இம் மன்றத்தில் அங்கம் வகிக்கும் மாணவர்களால் இவ் வருட கோட்டமட்டப் பாடசாலைகளுக்கிடையிலான சிறுவர் நாடகம் போட்டியில் "காட்டில் ஒரு மாநாடு" எனும் சிறுவர் நாடகம் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

### ஏனைய மன்றங்கள்.

பாட ரீதியாக மன்றங்கள் இயங்குகின்றன. பாடப் பொறுப்பாசிரியர்கள் பொறுப்பாக இருந்து வழிகாட்டி நடாத்தி வருகின்றனர்.

க.பொ.த (உ/த) மன்றம் இவ் ஆண்டும் மதிய போசன விருந்து வைபவத்தை சிறப்பாகக் கொண்டாடியது. மேற்படி மன்றங்கள் பாடசாலையின் விழாக்களின் போது தங்களது செயற்பாட்டைச் செவ்வனே செய்து வருகின்றன. அத்துடன் பாட ஆசிரியர்களின் பயிற்சியால் கோட்டம், வலயம் மாவட்டப் போட்டிகளில் மாணவர்கள் பங்கு பற்றி பல இடங்களைப் பெற்று உள்ளார்கள்.

## சாரணியம்:

இம் மன்றம் ஆசிரியர் திரு. நா. பிரணவரூபன் அவர்களின் வழிகாட்டலின் கீழ் திறம்பட இயங்கி வருகின்றது. இவர்கள் பல்வேறு சமூகசேவைகளையும், ஆலய தொண்டர் சேவைகளையும் நிறைவேற்றுவதுடன், வருடாந்த சாரணர் பாசறையில் கலந்து பல அரிய சாதனைகளை நிலைநாட்டியுள்ளார்கள்.

## ஆசிரியகழகம்:

இக் கழகம் திருமதி. சி. கிருபானந்தராஜாவை தலைவராகவும், திரு. செ. பாலச்சந்திரனை செயலாளராகவும், திரு. நா. பிரணவரூபனை பொருளாளராகவும் கொண்டு திறம்பட இயங்கி வருகின்றது.

பாடசாலையின் அனைத்து நிகழ்வுகளிலும் ஒத்துழைப்பையும், ஆயிரக்கணக்கில் நிதியுதவியையும் பங்களிப்புக்களையும் நல்கி வரும் இக் கழகத்தின் சேவை மேலும் தொடர வாழ்த்துகின்றேன்.
இ.ஆ.சே வகுப்பு 2 தரம் 1 ற்கு பதவியுயர்வு பெற்ற திருமதி. ச. இலட்சியன், வகுப்பு 2 தரம் II இற்கு பதவியுயர்வு பெற்ற திருமதி. வ. குமாரலிங்கம் இருவரையும் வாழ்த்துகின்றேன்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்:

இச் சங்கம் அதிபரைத் தலைமையாக கொண்டு இயங்குகின்றது. இதன் செயலாளராக திரு. சி. நாகேந்திரம் அவர்களும் பொருளாளராக திருமதி. சு. கிருபானந்தராஜா அவர்களும் கடமையாற்றுகின்றார்கள். பல்வேறு வகையில் இச் சங்கம் பாடசாலை வளர்ச்சிக்கு உதவி வழங்கி வருகின்றது.

## பழைய மாணவர் சங்கம்:

பாடசாலையின் வளர்ச்சியை குறியாகக் கொண்டு இயங்கி வரும் இச் சங்கத்தின் தலைவராக அதிபரும், செயலாளராக சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களும் பொருளாளராக திரு. த. தயானந்தன் அவர்களும் பணியாற்றி வருகின்றனர்.

பழைய மாணவர் சங்கத்தின் நிதிவளத்தைப் பெருக்க இவ் வருடம் பழைய மாணவர்கள் பலர் (பெருந்) நிதிகளை அன்பளிப்புச் செய்துள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:-

| பெயர் | ரூபா |
|---|---|
| திரு. செ. நாவரசன் (பத்தாவத்தை) | 10,000.00 |
| திரு. V. சிதம்பரநாதன் (மயிலங்கூடல்) | 10,000.00 |
| திரு. S. கௌரிபாலன் (கனடா) | 6,200.00 |
| திருமதி. ந. இராஜேந்திரம் (வேரவல்) | 5,000.00 |
| திரு. து. ரவீந்திரன் (சித்திரமேழி) | 3,000.00 |
| திருமதி. மு. சற்குணதேவி ( " ) | 2,500.00 |
| திரு. த. பேரானந்தராசா ( " ) | 2,000.00 |
| திரு. த. திருநாவுக்கரசு (கருகம்பனை) | 2,000.00 |
| தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் | 3,000.00 |

மேற்படி நிதிகள் மூலம் பாண்ட் வாத்தியச் சீருடை, கரப்பந்தாட்ட, உதை பந்தாட்ட வீரர்களுக்கான சீருடை, பாடசாலை தெற்குப் புற வேலிகள் மதில் கட்டுவதற்கான அத்திவாரம் இட்டமை, சைக்கிள் கொட்டகை நிறுவியமை, போன்ற பணிகளுக்குப் பயன் படுத்தப்பட்டுள்ளன.

இவ் வருட உலக ஆசிரியர் தினத்தையும் மாணவர்களுடன் இணைந்து சிறப்பாக நடாத்தியுள்ளது.

## வேண்டுகோள் :

எமது பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை காரணமாக தரம் 1, 3, 4, 5 வகுப்புக்களுக்கு ஏனைய ஆசிரியர்கள் தங்கள் ஓய்வு நேரங்களையும் பொருட்படுத்தாது கற்பித்து வருகின்றனர். 23 ஆசிரியர்களை கொண்டிருக்க வேண்டிய எமது பாடசாலையில் 14 ஆசிரியர்களே உள்ளதால் மேலும் 4 ஆரம்ப பிரிவு ஆசிரியர்களையும், மற்றும் 5 ஏனைய பாட ஆசிரியர்களையும், விளையாட்டு மைதானத்தை செப்பனிட்டுத் தந்துதவுமாறும், சீராக கல்வி தொடர ஆவன செய்ய எமது பிரதேச பாராளு மன்ற உறுப்பினரை அன்புடன் வேண்டு -கின்றேன்.

## நன்றிகள் :

எமது பாடசாலையில் எழுந்தருளி அருள் பாலித்துக் கொண்டு இருக்கும் நடராஜப் பெருமானுக்கு முதற்கண் நன்றிகள் கூறி, எமது அழைப்பை ஏற்று வருகை தந்து விழாவைச் சிறப்பிக்கும் ஆசியுரை வழங்கிய அருட்கவி. சீ. விநாசித்தம்பி அவர்களுக்கும் முதன்மை விருந்தினர் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினர் அவர்களுக்கும்,

நிறுவுனர் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ள உதவிப் பணிப்பாளர் அவர்களுக்கும், நிறைவுரை ஆற்ற உள்ள சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை அவர்களுக்கும் நன்றிகள் உரித்தாகுக.

பாடசாலையின் வளர்ச்சிக்கு தம்மால் முடிந்தளவு ஒத்துழைப்பை நல்கிவரும் ஆசிரிய கழகத்தினர்க்கும், கல்வி சாரா ஊழியர் திரு. சி. சுரேஷ்குமார் அவர்களுக்கும் நன்றிகள்.

பரிசளிப்பு விழாவிற்கு வருடா வருடம் நிதியுதவி செய்து வரும் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான நிர்வாகத்தினருக்கும், பரிசுப் புத்தகங்கள் சிலவற்றை தந்து உதவிய அருட்கவி. சீ. விநாசித்தம்பி பண்டிதர். சி.. அப்புத்துரை, திரு. காசிதாசன் ஆசிரியர், திரு. த. தயானந்தன் ஆசிரியர் ஆகியோருக்கும், ஞாபகார்த்தப் பரிசில்களை வழங்கி சிறப்பிக்கும் அன்பர்கள், ஆதரவாளர்கள், அனைவர்க்கும் நன்றிகள் உரித்தாகுக.

இப் பாடசாலை, பெருமை பெற்றிட சாதனைகள் படைத்திட உதவிக்கரம் நீட்டும் பா.அ. சங்கத்தினர்க்கும், ப.மா. சங்கத்தினருக்கும், நலன் விரும்பிகள் யாவர்க்கும் மனமார்ந்த நன்றிகள்.

இவ் விழாவை சிறப்பிக்கும் அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பெரியோர்கள், யாவர்க்கும் நான் நன்றி கூறி, இவ் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி. வணக்கம்.

19.11.2002 — அதிபர்.

## பரிசளிப்பு விழா 2002 - 11 - 19
### பரிசு பெறும் மாணவர்கள்.

| தரம் | இல | பெயர் | விபரம் |
|---|---|---|---|
| 1 | 01 | ஜெ. அனிதா | ஒன்றிணைந்த பாடங்கள் |
| | 02 | தி. தாரணி | " " |
| | 03 | செ. மேரிடெய்சிமலர் | " " |
| 2 | 04 | ப. டினோயா | " " |
| | 05 | பா. சோபனா | " " |
| | 06 | ஜெ. ஜெயப்பிரதாபன் | " " |
| 3 | 07 | சு. சுவேதிகா | " " |
| | 08 | வி. சர்மினி | " " |
| | 09 | க. நாவரசன் | " " |
| 4 | 10 | க. கம்சிகா | " " |
| | 11 | செ. பிரதீபன் | " " |
| | 12 | ம. கிருஷாயினி | " " |
| 5 | 13 | கு. கர்ணிகா | " " |
| | 14 | ந. ஹரிசாந் | " " |
| | 15 | நா. சுகந்தன் | " " |
| 6 | 16 | ம. கார்த்தாயினி | ஆங்கிலம், தமிழ், அடிகியல் சுகாதாரம், சுற்றாடல், சைவசமயம் |
| | 17 | ந. நிரோசன் | கணிதம், றோமன் கத்தோலிக்கம் |
| 7 | 18 | த. பிரசன்யா | தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம் சமூகக்கல்வி, சுகாதாரம் உ.க |
| 7 | 19 | ச. பிரபாலினி | சைவசமயம், கணிதம், சங்கீதம் |
| | 20 | யோ. யூடித் யஸ்மின் | றோமன் கத்தோலிக்கம். |
| | 21 | கா. கயேந்திரன் | சித்திரம். |
| 8 | 22 | தி. டிலக்சனா | ஆங்கிலம், விஞ்ஞானம், சித்திரம் சுகாதாரம், சைவசமயம். |
| | 23 | ந. கிறேஸ் நிசாந்தினி | றோமன் கத்தோலிக்கம். |

| | | | |
|---|---|---|---|
| 8 | 24 | ஜே.மேரிபுஸ்பமலர் | – கணிதம் |
| | 25 | சி.ஜீவிதா | – சமூகக்கல்வி |
| | 26 | சு.வித்தியா | – தமிழ் |
| | 27 | ப.சுகன்யா | – சங்கீதம். |
| 9 | 28 | சி.நிசாந்தன் | – சைவசமயம், கணிதம் விஞ்ஞானம், சமூககல்வி. |
| | 29 | பொ.மதியழகன் | – தமிழ், ஆங்கிலம், சங்கீதம் றோமன் கத்தோலிக்கம் |
| | 30 | சி.றஜீபன் | – சித்திரம். |
| 10 | 31 | தி.பகீரதி | – சைவசமயம், தமிழ், கணிதம் சமூககல்வி விஞ்ஞானம், வணிககல்வி. புவியியல். |
| | 32 | ஜெ.அன்ரன் செல்வ – குமார் | – விவசாயம். |
| | 33 | சி.ஆன்சோபிகா | – றோமன் கத்தோலிக்கம் |
| | 34 | சி.பிருந்தா | – சங்கீதம். |
| | 35 | த.சுகிர்தன் | – சித்திரம். |
| | 36 | கா.நிர்மலா | – மனையியல். |
| 11 | 37 | தி.சர்மிளா | – தமிழ், விஞ்ஞானம், புவியியல் சமூககல்வி, வணிககல்வி சுகாதாரமும் உடற்கல்வியும். |
| | 38 | வி.பிரசன்யா | – ஆங்கிலம், கணிதம், சங்கீதம். |
| | 39 | ம.கயல்விழி | – சைவசமயம், விவசாயம் |
| | 40 | ஜெ.சுலோசன் | – சித்திரம். |
| | 41 | த.சிந்துஜா | – மனையியல். |
| 12 | 42 | ஜெ.சயூபன் | – தமிழ், இந்துநாகரிகம் அளவையியல். |
| 13 | 43 | சு.அலைமகன் | – தமிழ், அளவையியல், ஆங்கிலம் இந்து நாகரிகம். |
| | 44 | சி.வசிதா | — |

45 க. சௌகல்யா G.C.E (O/L) சிறந்த பெறுபேறு

46 ஐ. அகல்யா G.C.E (A/L) சிறந்த பெறுபேறு

47 ஜெ. ஜெயசௌரியா 5ம் தர புலமைப் பரிசு சித்தி

48 நா. சுகந்தன் " " "

49 கு. கர்ணிகா " " "

<u>பாடசாலை மட்ட சிறப்புப் பரிசில்கள்</u>

50 உதைபந்தாட்ட வீரர் அ. அருட்குமரன்

51 கரப்பந்தாட்ட வீரர் தி. தர்சன்நாத்

52 வலைப்பந்தாட்ட வீராங்கனை சி. சிவநந்தினி

53 மெய்வல்லுநர் வீரர் த. கோபிநாத்

54 மெய்வல்லுநர் வீராங்கனை- சு. அலைமகள்

55 சாரணர் ஜெ. ஜெயரோசன்

56 நடிகர் (ஆரம்ப பிரிவு) வி. சர்மினி

57 " " நா. சுகந்தன்

58 மெய்யவன். பா. சிறீதரன்.

59 மெய்யவள் சு. அலைமகள்.

## ஞாபகார்த்தப் பரிசில் வழங்குபவர் விபரம் 2002

| வழங்குபவர் | நினைவிற்குரியவர் | துறை. |
|---|---|---|
| 1. திருமதி. த. கிருபாசக்தி | ஏழாலை இராஜரட்ணம் | மொழியறிவு |
| 2. சேதுப்பிள்ளை குடும்பம் | திருமதி. க. சேதுப்பிள்ளை | சமயம், உயர்தரம் சாதாரணதரம் சிறந்த பெறுபேறு. |
| 3. டாக்டர். க. பாலசுப்பிரமணியம் | திரு+திருமதி கந்தையா | விஞ்ஞானம், கணிதம் |
| 4. சைவப் புலவர் திரு. சு. செல்வத்துரை | — | "மெய்யவன்" "மெய்யவன்" விருதுகள் |

# பாடசாலைக் கீதம்

இராகம் : கல்யாணி　　　　　　　　தாளம் : ஆதி

வாழிய மெய்கண்டான் மாவித்தியாலயம்
நீடிசை யோடுபல் லூழி

ஏழூர் ராசரத் தினமா மகிபன்
இளவா லைக்கருள் நிதியம்
வாழ்க் கல்மின் எனும்பேர் இலட்சிய
வாசக மாண்பொருள் தந்தே... (வாழிய)

தாமரை ஏடு தீபம் நல் இடபம்
தாங்கிய இலட்சினை யாலே
தண்ணளி ஞானம் ஒளியொடு தருமம்
தரணியில் நாம்பெற நின்றே... (வாழிய)

கல்வியும் கலையும் ஒழுக்கமும் பெருக
காண்பரும் புகழெமக் காக்கி
வாழ்க... வாழ்க..... வாழ்க....
மாநிலம் போற்றிட வாழ்க..... (வாழிய)